[1980 பிப்ரவரி 13

உ. வட ஆற்காடு மாவட்டத்தில் மருத்துவமனைகளில் மருத்துவர் கள்இல்லாமை குறித்து.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

''வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள தலைமை மருத்துவ மனைகளிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் மருத்துவர் கள் இல்லாமையால் பொதுமக்கள் அவதியுறுவது குறித்து''.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், வேலூர் தலைமை மருத்துவ மனைக்கு மொத்தம் அனுமதிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை 35. இதில் எல்லாப் பதவிகளிலும் மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இது தவிர இம் மாவட்டத்திலுள்ள ஆம்பூர், ஆரணி, அரக்கோணம், செங்கம், செய்யாறு, குடியாத்தம், கலவை, பேரணூர், சோளிங்கர், தானிப் பாடி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, வாணியம்பாடி, வாலாஜா, வந்தவாசி ஆகிய எல்லாத் தாலூக்கா தலைமை மருத்துவமனையிலும் மற்றைய எல்லா மருத்துவமனைகளிலும் அனுமதிக்கப்பட்ட எல்லா இடங்களிலும் மருத்துவர்கள் பணி புரிந்து வருகிறார்கள்.

2. இம் மாவட்டத்தில் மொத்தம் 38 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. இவற்றிற்கு அனுமதிக்கப்பட்ட மொத்த மருத்துவ அலுவலர்களின் எண்ணிக்கை 99. இவற்றுள் தற்சமயம் 26 பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன.

3. தமிழ்நாடு மருத்துவப்பணியில், காலியாக உள்ள இடங் களை நிரப்புவதற்காக 1978 ஆம் ஆண்டில், தமிழ்நாடு பொதுப் பணித் தேர்வாணைக்குழு மொத்தம் 1,523 வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்தது. இவர்களில் 884 பேர்கள் ஏற்கனவே தமிழ் நாடு மருத்துவப்பணியில் தற்காலிகமாக நியமனம் பெற்றிருந் தார்கள். மற்றைய 639 பேர்களையும் அவர்களின் தேர்வு அரசால் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னால் தற்காலிகமாக நிய மனம் செய்து 1979 ஆம் வருடம் மார்ச் மாதம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்கூறிய 639 பேர்களில் 360 பேர்களே அவர்களுக்குப் பணி நியமன உத்தரவில் குறிப்பிட்ட நாளுக்குள் பணியில் சேர்ந்தனர். 150 பேர்களுக்கு பட்ட மேல் படிப்பு படித்துக் கொண்டிருக்கும் காரணத்தினால், அவர்கள் படிப்பினை முடிக்கும் வரையில், பணியில் சேர்வதற்காக காலத்தை நீட்டித்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மற்றைய 129 பேர்கள் இது வரை பணியில் சேரவில்லை. அவர்களிடமிருந்து எந்தவிதமான தகவலும் பெறப்படவில்லை. அவர்கள் பணியில் அமர்த்தி

1980 பிப்ரவரி 13] [திரு திருச்சி ஆர். சௌந்திரராஜன்]

வழங்கப்பட்ட உத்தரவு பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் பணியில் சேர வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தும் அவர்கள் பணியில் சேரவில்லை. ஆகவே நியமன உத்தரவை பெற்றதற்கு அத்தாட்சி உள்ளவர்களின் பெயர்களை, தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலிலிருந்து நீக்குவதற்காக அனுப்பிவைக்குமாறு மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநர் கோரப்பட்டுள்ளார். அவைகள் வந்து சேர்ந்தவுடன் அதன்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

4. மருத்துவர்கள் அவ்வப்போது பட்ட மேல்படிப்பு, பயிற்சி, விடுப்பு ஆகியவற்றில் சென்று விடுவதால் காலியிடங்கள் அடிக்கடி தோன்றுகின்றன. எனினும் மேலே கூறப்பட்ட 26 காலி இடங்களையும் மருத்துவர்களையும் தற்காலிகமாக நியமித்து நிரப்புவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

5. வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களில் மொத்தம் 26 பணியிடங்கள் காலியாக இருந்த போதிலும் மருத்துவர்களே இல்லாத ஆரம்பச் சுகாதார நிலையங்கள் எதுவும் இல்லை. ஆகவே இத் தீர்மானத்தின் மீது மேற்கொண்டு விவாதம் நடத்தத் தேவையில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமை மருத்துவ மனை அனைத்திலும் மருத்துவ அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். கடந்த வளர்ச்சி மன்றக் கூட்டத்தில்கூட ஏ.டி.எம்.ஓ. மருத்துவ அதிகாரிகள் இல்லையென்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நாங்களும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். இதிலே அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கிராமங்களில் பல்வேறு ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பெண் மருத்துவ அதிகாரிகள் இல்லை. பிரசவம் பார்க்க வேண்டும் என்றால் தாய்மார்கள் சிரமப்படுகிறார்கள். இந்த நிலைமைகளைப் போக்க விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தற்போது காலியாக இருக்கும் 26 இடங்களை நிரப்புவதற்கான ஆய்வினை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் அதுபற்றி முடிவெடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: நம்முடைய ஆரணி சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் கூட ஆரணியில் மருத்துவ அதிகாரி இல்லை என்று கேட்டார்கள். அப்படிப்பட்ட குறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைமை மருத்துவ மனையிலும் ஏனைய அரசாங்க மருத்துவ மனைகளிலும் மருத்துவர்கள் இல்லை என்ற குறை இல்லையென்று அறிக்கை பெறப்பட்டிருக்கிறது. ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 90 மருத்துவர்கள் இருக்க வேண்டிய இடங்களில் 26 இடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றை நிரப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

ஊ ; நீலகிரி மாவட்டத்தில், புயல், மழையால் பாதிக்கப்பட்ட சாலைகளை, பாலங்களை செப்பனிடுவது குறித்து.

திரு. கே. உச்சி : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"நீலகிரி மாவட்டத்தில் கடந்த புயல் மழையினால் சேதமுற்ற சாலைகள், பாலங்கள் செப்பனிடப்பட வேண்டிய அவசியம் குறித்து".

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் 1978 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணத்தின்கீழ் 869 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில் உதகமண்டலம் குன்னூர் நகராட்சிப் பணிகளும் அடங்கும். அவற்றுள் 88 பணிகளைத் தவிர மற்ற பணிகள் யாவும் முடிக்கப்பட்டு விட்டன. இந்த 88 பணிகளில் 10 பெரிய பாலப் பணிகளும் அடங்கும். இந்த 10 பாலப் பணிகளில் ஒரு வேலை தவிர மற்ற பணிகள் நல்லமுறையில் நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள குன்னூர்—கோத்தகிரி சாலையிலுள்ள ஒரு பெரிய பால வேலை இரயில்வே இலாகாவின் ஒப்புதலை எதிர் நோக்கியுள்ளது.

1979 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணத் திட்டத்தில் 183 பணிகள் நீலகிரி மாவட்டத்தில், உதகமண்டலம் மற்றும் குன்னூர் நகராட்சிப் பணிகள் உட்பட, எடுத்துக் கொள்ளப்பட்டன. எல்லா தற்காலிக நிவாரணப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. எவ்விடத்திலும் போக்குவரத்திற்குத் தடையில்லை. கூடலூர் வட்டாரத்திலுள்ள இரண்டு பெரிய பாலங்கள் தவிர மற்ற எல்லா பணிகளுக்கும் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு தற்போது முன்னேற்ற நிலையில் உள்ளன. இவை தவிர நிரந்தர பணிகள் மற்றும் தடுப்பு நிவாரணப் பணிகள் எடுக்கப்பட்டு செய்யப்பட்டு வருகின்றன.

திரு. கே. உச்சி : இங்கு ஆரம்பிக்கப்பட்ட பால வேலைகள் துரிதமாக எடுக்கப்பட்டு முடிக்கப்படவில்லை. அதோடு 1978 ஆம் ஆண்டு புயலால் சேதமுற்ற பாலங்களைச் சீரமைக்கும்